2001 செப்டம்பர் 4]

மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்: பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த ஆட்சியில் அனைத்து கால்நடை மருத்துவ நிலையங்களிலும் மருத்துவர்கள் இருக்குமாறு வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்பதைக் கூறிக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பா. பரணிகுமார்.

திரு. பா. பரணிகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளிர்பதனக் கிடங்கில் முட்டைகளை வைத்துக் கொள்வதினால் அதனுடைய தரம் குறையுமா? அதேபோன்று முட்டையிலிருந்து வரக்கூடிய பிராய்லர் கோழிகளைச் சாப்பிடுவதால் side effects ஏற்பட்டு, சில வியாதிகள் வருவதாக ஒரு சில நாட்களுக்கு முன்பு கூறினார்கள். இதை அமைச்சரவர்கள் தகுந்த முறையில் ஆராய்ந்து தக்க விளக்கம் அளிப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனிக் கேள்வி கேட்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

உறுப்பினரின் முன்னறிவிப்பு

திரு. சி. ஞானசேகரன்: சேலத்தில் விஷச் சாராயம் அருந்தியதால் ஏற்பட்ட பிரச்சினை குறித்து விவாதிக்க நான் ஓர் ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன். அதை எடுத்துக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன், அரசின் பதில் கிடைத்தவுடன் எடுத்துக்கொள்ளப்படும்.